8

18 NOV 1945

378

Registered No. M. 4018.

உ

# வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 7 | September 1945 | No. 9

விஷய சூசிகை. பக்கம்


| | |
|---|---|
| 13 வது திராவிட வைத்ய சமமேளனம் | 1 |
| கட்டுரை போட்டி | 2 |
| யோகரத்நாகரம் | 45 – 56 |



**சந்தா விகிதம்.**

வருஷ சந்தா:—
உள் நாட்டுக்கு ரூ. 2
வெளிநாட்டுக்கு ரூ. 3

**விளம்பர விகிதம்.**

மாதம் 1-க்கு பக்கம் 1க்கு ரூ. 8
,, ,, ½-க்கு ரூ. 4
,, ,, ¼-க்கு ரூ. 2

கிடைக்குமிடம்:—

**Pandit, S. NARAYANA IYENGAR.**

Editor and Publisher.

5, West Masi Street, Madura.


காபிரைட்] [விலை 0—3—0

Printed by Venkateswar Press, Madura, Paper Issue Card M. D. No. 112, 13-11-45, 100 copies. Paper supplied by party.

L:5m211,N25VC
M45.7.9.
210249

ओं प्रजारक्षण दीक्षिताय नमः
शुक्लवाससे नमः
पुरुषार्थप्रदाय नमः
प्रशान्तात्मने नमः
भक्तसर्वार्थसाधकाय नमः
भोगभाग्यप्रदात्रे नमः
महैश्वर्यदायकाय नमः
लोकशल्यहृते नमः
चतुर्भुजाय नमः
नवरत्नविभूषिताय नमः 90
निस्सीम महिम्ने नमः
कोविदानां पतये नमः
दिवो दासाय नमः
प्राणाचार्याय नमः
भिषङ्मणये नमः
त्रैलोक्यनाथाय नमः
भक्तिगम्याय नमः
तेजोनिधये नमः
कालकालाय नमः
परमार्थगुरवे नमः 100
जगदानन्दकारकाय नमः
आदिवैद्याय नमः
श्रीरङ्गनिलयाय नमः
सर्वजन सेविताय नमः
लक्ष्मीपतये नमः
सर्वलोकरक्षकाय नमः
कावेरीस्नानसंतुष्टाय नमः
सर्वाभीष्ट प्रदाय नमः 108

---

Published by Swadesa Vaidya Sabha
35, Kakathope Street, Madura.

# 13வது திராவிட வைத்ய ஸம்மேளனம்.

ஷை சம்மேளனம் (கான்பரென்ஸ்) நாளது 1945ஷு நவம்பர்மீ 25, 26, தேதிகளில் **மதுரையில்** நடைபெறுகிறது. மாகாணத்தின் பல பாகங்களிலிருந்து பல பண்டிதர்கள் விஜயம் செய்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது. **பிரதிநிதி கட்டணம் ரூ. நான்கு. கண்காக்ஷி கட்டணம் ரூ. பத்து.** பிரதிநிதிகளுக்கு இடவசதி முதலியவை இனாமாக அளிக்கப்படும். கண்காக்ஷி வைப்பவர் பெஞ்சு, மேஜை, பீரோ, முதலியவைகளைச் சொந்தப்பொறுப்பில் சேகரித்துக்கொள்ளவேண்டும். காக்ஷிப் பொருளைப் பாதுகாப்பதும் அவர்களின் சொந்தப்பொறுப்பாகும். சம்மேளனத்தில் தீர்மானங்கள் கொண்டுவர பிரதிநிதிகளுக்கு மாத்திரம் உரிமையுண்டு. தீர்மானம் கொண்டுவர விரும்புவர்கள் நவம்பர் 15உக்கு முந்தியே நகலை மண்டலம் பொதுக்காரியதரிசிக்கு அனுப்பிவிடவேண்டும். பிரமேக நோயைப்பற்றித் தமிழிலும், பாண்டு நோயைப்பற்றி வடமொழியிலும் போட்டி வியாஸங்கள் நவம்பர்மாதம் 10உக்குள் மண்டலப் பொது காரியதரிசிக்கு அனுப்பப்படவேண்டும். போட்டி வியாஸங்களைப் பரிசீலனை செய்யும்படி மண்டலம் நியமித்துள்ள கமிட்டியார் ஷை வியாசங்களைப் பரிசீலனை செய்து ஒப்புக்கொள்ளப்பட்ட வியாசங்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். ஷை பரிசுகள் சம்மேளன தினங்களில் வழங்கப்படும். வியாஸங்கள் விஷயமாக விவரம் அறிய விரும்புவோர் மண்டலத்தின் பொதுக்காரியதரிசிக்கு எழுதித் தெரிந்துகொள்ளவேண்டும். மண்டலம் பொதுக்காரியதரிசியின் விலாசம்—**பண்டிட், P. S. ராமசர்மா**, மண்டலம் பொது காரியதரிசி, **கரூர்.**

பிரதிநிதிக்கட்டணம், கண்காக்ஷி கட்டணம், நன்கொடை முதலியவைகள் அடியில்கண்ட சம்மேளன காரியதரிசிக்கு அனுப்பப்படவேண்டும். சம்மேளன தினங்கள் இரண்டிலும் "பிரமேஹம்" "பாண்டு" என்ற விஷயங்களைத்தவிர வேறு விஷயங்கள் உபன்யசிக்கப்படமாட்டா. இவ்விஷயங்களைப்பற்றி உபன்யாசம் செய்ய விரும்புவோர் சம்மேளன காரியதரிசிக்கு நவம்பர் 20உக்குள் தகவல் கொடுக்கவேண்டும். சம்மேளன தினங்களில் போதுமான அவகாசம் கிடைத்தால்தான் ஷை உபன்யாசங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். சம்மேளன காரியதரிசி விலாசம்:—

**பண்டிட், நாராயணய்யங்கார்,**
ஸம்மேளன காரியதரிசி,
5, மேலமாசிவீதி, மது[illegible]

Printed by Venkateswar Press, Madura, Paper Iss[illegible] Card No. M. D. 112. 23—10—45. 100 copis. Paper suplie[illegible] party.

210244

## கட்டுரைப்போட்டி, பரிசு-தங்கப்பதக்கமும், வெள்ளிக்கோப்பையும்.

கட்டுரைகளுடைய பொது விதிகள்:—வைத்தியத்தொழில் பயிலும், அல்லது வைத்தியபாடம் கற்றுக்கொண்டிருக்கும் எல்லா வைத்தியர்களுக்கும் கட்டுரைப்போட்டியில் கலந்துகொள்ள உரிமை உண்டு; மாணவருக்கு இல்லை, 1945 நவம்பர் 10உக்குள் கட்டுரைகள் கீழ்கண்ட விலாசத்திற்கு ரிஜிஸ்டர் போஸ்டு மூலம் அனுப்பப்படவேண்டும். கட்டுரைக்காரரால் கட்டுரையில் தன் பெயர் எழுதப்படக்கூடாது. பெயரையும், விலாசத்தையும் தனிக்கடிதத்தில் எழுதிக் கட்டுரையுடன் கூட அனுப்பவேண்டும். கட்டுரையின் அளவு foolscap கடிதத்தில் சுமார் 15-20 பக்கங்கள் வரை எழுதப்பட்டும், சுமார் $1\frac{1}{2}$-மணி நேரத்தில் படிக்கக்கூடியதாகவும் இருக்கத்தக்கது. கட்டுரைகள் ஆராய்ச்சியுடன் விமர்சம் செய்து ஆயுர்வேத முறைப்படி இருக்கவேண்டும். வியாதியின் காரணம், குறி, பரீக்ஷைக்கிரமங்கள், சிகித்ஸை முதலியவைகளில் சாஸ்திரங்களில் கூறியவைகளுடன் நேரில் கண்டவைகளையும் விமர்சித்துக் காட்டவேண்டும். நமது முறைப்படி சிகித்ஸை செய்யுங்கால் பாண்டு—பிரமேஹ நோய்களில் மேல்நாட்டு வைத்திய முறைப்படி செய்யப்படும் பரீக்ஷைகளினால் ஏதாகிலும் உபகாரம் ஏற்படமுடியுமா? முடியாதா? வென சுருக்கமாய் விளக்குவது நலம். தன் அனுபவத்தில் கைகண்டதும், தென்னாட்டில் விசேஷமாய் பிரசித்தி பெற்றதுமான மருந்து முறைகள் யுக்தியுடன் விளக்கத்தக்கவை. மஹாநாடு ஸபையில் நடக்கும் சர்ச்சையில் கட்டுரையாளர் நேரில் வந்து தாம் எழுதிய விஷயத்தில் ஸந்தேஹங்களுக்கு பதிலளித்துக் கட்டுரையைப் படிக்கவேண்டும். தங்கப்பதக்கத்திற்குரிய பாண்டு வியாதியைப் பற்றிய கட்டுரையானது ஸம்ஸ்க்ருத பாஷையில் தேவநாகரலிபியில் எழுதப்படவேண்டும். வெள்ளிக்கோப்பைப் பரிசுக்குரிய பிரமேஹ ரோகங்களைப்பற்றிய கட்டுரையானது தமிழ் பாஷையில் எழுதப்படவேண்டும். பழைய நூல்களில் சொல்லப்பட்ட எல்லாவித பிரமேஹங்களும் இப்போது அனுபவத்தில் தென்படுகின்றனவா என்று சுருக்கமாய் விளக்கி, பழைய நூல்களில் கூறப்பட்ட கூறப்படாமல் இந்நாளில் காண்கிற பூயமேஹம் (Gonrrhoea) உள்பட ஸகல பிரமேஹங்களுடையவும் காரணம், குறி, பரீக்ஷை சிகித்ஸை கிரமங்கள் சுருக்கமாய் கூறப்படவேண்டும். மதுமேஹத்தைப்பற்றி ஸாங்கோபாங்கமாய் விஸ்தரித்து, தென்னாட்டு ஸித்தவைத்திய ஸம்பிரதாயத்தில் சொல்லப்பட்ட விசேஷங்களையும் விளக்கி ஆராய்ச்சியுடன் எழுகவேண்டும்.

குறிப்பு:—பிரமேஹங்களைப்பற்றி தனி ஸித்தவைத்திய முறைப்படியே ஸகல விஷயங்களையும் விளக்கிக் கட்டுரை எழுதப்படலாம், பரிசு தீர்மான விஷயத்தில் ஸித்தவைத்திய முறைப்படி எழுதப்பட்டதையும் ஸம அந்தஸ்திலேயே கவனிக்கப்படும்.

விலாசம்:— Pt. P. S. RAMASARMA, Karur.

வேண்டும். பார்ங்கியாதி—சிறுதேக்கு, கடுக்காய்ப்பூ, செவ்வியம், தாளிசபத்திரி, மிளகு, தேசாவரம், வகைக்குத்தோலா எட்டு, சுக்கு தோலா 24, திப்பிலி, யானைத்திப்பிலி, விலாமிச்சவேர், கருவாப் பட்டை, ஏலம், பச்சிலை, சிறுநாகப்பூ, வகைக்குத் தோலா நான்கு, சர்க்கரை தோலா 16, இவைகளை எடுத்து சர்க்கரை நீங்கலாக மற்ற வைகளை இடித்துப் பொடி செய்து பிறகு சர்க்கரையையும் கலந்து அந்தப்பொடியில் அரைத்தோலா முதல் ஒரு தோலா வரை தேன் முதலிய அனுபானங்களில் கொள்ள எண்வகை ஜ்வரங்களும், காஸம், சுவாஸம், ஆகிய இவையும் விலகும். சோபம், சூலம், வயிற்றுப் பொருமல், திரிதோஷ தோஷங்கள், ஆகிய இவையும் போம். அனன்தாதி—நன்னாரி வேர், விலாமிச்ச வேர், கோரைக் கிழங்கு, சுக்கு, கடுகுரோகிணி, ஆகிய இவைகளைச் சமயெடை எடுத்துப் பொடிசெய்து முன்போல சாப்பிடவும், சூரியோதயத் திற்கு முந்தி சாப்பிடுவது நல்லது. இது ஜ்வரங்களை உடனே தணிப்பதுடன் ஜாடராக்னியையும் பலப்படுத்தும், திராக்ஷாதி—திராக்ஷை, சீந்தில், பூலாங்கிழங்கு, கடுக்காய்ப்பூ, கோரைக்கிழங்கு, செஞ்சந்தணம், சுக்கு, கடுகரோகிணி, பாடக்கிழங்கு, நிலவேம்பு, சிறுகாஞ்சொரி, விலாமிச்சவேர், பத்மகாஷ்டம், மல்லிவிதை, வெட்டி வேர், கண்டங்கத்திரி வேர், சாதாகோஷ்டம், வேப்பம்பட்டை, ஆகிய இவைகளைச் சமயெடை எடுத்துப் பொடிசெய்து முன்போல சாப்பிடவும். இதற்கு "தசாஷ்டாங்கம்" எனப் பெயர். பழங்காய்ச் சல், அரோசகம், சுவாஸம், காஸம், வீக்கம், ஆகிய இவைபோம். தாத்ரியாதி—நெல்லிவத்தல், கடுக்காய்த்தோல், இந்துப்பு, கொடு வேலி வேர், திப்பிலி, ஆகிய இவைகளைச் சமயெடை எடுத்துப் பொடிசெய்து முன்போல சாப்பிடவும். முன் சொல்லிய குணங் களைக் கொடுப்பதுடன் இது மலபந்தத்தையும் போக்கும். தாளிசாதி—தாளிசபத்திரி, மிளகு, சுக்கு, திப்பிலி, மூங்கிலுப்பு, இவைகள் முறையே ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து தோலா, ஏலம், கருவாப்பட்டை, வகைக்கு அரைத்தோலா, இவை களை இடித்துப் பொடிசெய்துகொண்டு சர்க்கரை 32 தோலா சேர்த்து கலந்துகொண்டு அரைத்தோலா பொடியைத் தகுந்த அனுபானங்களுடன் சாப்பிட காஸம், சுவாஸம், ஜ்வரம், வாந்தி,

அதிசாரம், விக்கம், வயிற்றுப்பொருமல், ப்லீஹா, கிரஹணீ, பாண்டு ஆகிய இவைபோம். இதை வடகமாகவும் செய்துகொள்ளலாம். ஸிதோபலாதி—கற்கண்டு தோலா 16, மூங்கிலுப்பு தோலா எட்டு, திப்பிலி தோலா நான்கு, ஏலம் தோலா இரண்டு, கருவாப்பட்டை தோலா ஒன்று, இவைகளை இடித்துப் பொடிசெய்து முன்போல தேன், நெய், இவைகளில் உபயோகிக்க காஸம், சுவாஸம், க்ஷயம், கைகால் எரிச்சல், அக்னிமந்தம், நாக்கில் சாரணையின்மை, பார்சுவ சூலம், அரோசகம், ஜ்வரம், மேல்நோக்கின ரக்தபித்தம், ஆகிய இவை நீங்கும். பிப்பல்யாதி—திப்பிலி, திரிபலை, இவைகளைச் சம யெடை எடுத்துப் பொடிசெய்து தேனில் சாப்பிட காஸசுவாஸங்கள் போம். மலபந்தம் நீங்கும், அக்னிபலமுண்டாம். கட்பலாதி—கட் பலம், கோரைக்கிழங்கு, கடுகுரோகிணி, பூலாங்கிழங்கு, சாதா கோஷ்டம், கர்காடகசிருங்கி, ஆகிய இவைகளைச் சமயெடை எடுத்து இடித்துப் பொடிசெய்து தேன் அல்லது இஞ்சி ரசத்தில் சாப்பிட ஜ்வரம், காஸம், சுவாஸம், அரோசகம், தொண்டைக்கம்மல், வாயு, சூலம், வாந்தி, க்ஷயம், ஆகிய இவைபோம். லகுசுதர்சன சூர்ணம்— இது யோகரத்ன ஸமுச்சயம் என்ற நூலில் கூறப்பட்டுள்ளது. சீந்தில்கொடி, தேசாவரம், திப்பிலி, கடுகுரோகிணி, கடுக்காய், சுக்கு கிராம்பு, வேப்பம்பட்டை, சந்தனம், வகைக்குத் தோலா ஒன்று, நிலவேம்பு தோலா $4\frac{1}{2}$ ஆக இவைகளை இடித்துப் பொடிசெய்து அரைதோலா பொடியை தகுந்த அனுபானத்தில் உபயோகிக்க திரிதோஷப்பிரகோபங்கள், சகல ஜ்வரங்கள், போம். பேட் முனி வர் கூறியுள்ள ஸுதர்சன சூர்ணம்—தாளிசபத்திரி, திரிபலை, ஏலம், திரிகடு, கருவாப்பட்டை, த்ராயமாணு என்ற மருக்கொன்னை, சிவதை, மருள்கிழங்கு, தேசாவரம், மஞ்சள், மரமஞ்சள், பூலாங் கிழங்கு, குருந்தொட்டி, கோஷ்டம், கண்டங்கத்திரி, முள்ளி, கோரைக்கிழங்கு, பர்பாடகம், வேப்பம்பட்டை, சாதாகோஷ்டம், சிறுதேக்கு, ஓமம், பச்சைக்கர்ப்பூரம், செவ்வியம், கொடுவேலி, வெண்தாமரைக் கிழங்கு, தகரம், வெட்டிவேர், வாய்விளங்கம், வசம்பு, சிறுகாஞ்சொரி, வெப்பாலைப் பட்டை, சங்கம் வேர், வெப் பாலையரிசி, தேவதாரு, விலாமிச்சவேர், முருங்கை விதை, பேப் புடல், கடுகுரோகிணி, தாமரைக்கிழங்கு, பச்சிலை, அதிவிடயம்,

கரகோலி, அதிமதுரம், குங்குமப்பூ, மூங்கிலுப்பு, கிராம்பு, ஓரிலை, கல்பாசி, மூவிலை, செவ்வந்திப்பூ, வகைக்குத் தோலா ஒன்று, நில வேம்பு தோலா 23, இவைகளுள் பச்சைக்கர்ப்பூரம், குங்குமப்பூ, இந்த இரண்டு நீங்கலாக மற்றவைகளை இடித்துப் பொடிசெய்து அதோடு பின்சொன்ன இரண்டு சாக்குகளையும் பொடி செய்து சேர்த்துக் கலந்து ஷை பொடியில் அரைத் தோலாவை தகுந்த அனுபானத்துடன் சாப்பிட வாத கபரோய்கள், சகல ஜ்வரங்கள், விஷ ஜ்வரங்கள், அபிகாத ஜ்வரங்கள், ஆமஜ்வரம், மானஸஜ்வரம், தாகஜ்வரம், சீதஜ்வரம், மூன்ரும் முறை, நான்காம் முறைக்காய்ச் சல்கள், பாகூிக ஜ்வரம், மாஸஜ்வரம், ஸந்நிபாத ஜ்வரங்கள், தாகம், எரிச்சல், கிருகிருப்பு, மயக்கம், சோர்வு, சோம்பல், சுவாஸம், காஸம் அரோசகம், பாண்டு, ஹலீமகம், காமாலை, பார்சுவசூலம், முதுகு வலி, முழங்கால் வலி, பிடரி வலி, வாதரோய், தலை இழுத்துப் பிடித் தல், ஜலக்குற்றம், தூஷீவிஷரோய், மாதவிடாயில் காணும் ரோய் கள், போம் இவைகளில் சுடுநீரில் சாப்பிடவும். பித்த ரோய்களில் குளிர்ந்த நீரில் குடிக்கவும். சார்ங்கதரம் என்ற நூலில்காணப்படும் சுதர்சன சூர்ணம்—திரிபலை, மஞ்சள், மரமஞ்சள், கண்டங்கத்திரி, முள்ளி, பூலாங்கிழங்கு, திரிகடு, தேசாவரம், மருள், சீந்தில், சிறு காஞ்சொரி, கடுகுரோகிணி, பர்பாடகம், கோரைக்கிழங்கு, மருக் கொன்னை, வெட்டிவேர், வேப்பம்பட்டை, சாதாகோஷ்டம், அதி மதுரம், வெப்பாலைப்பட்டை, ஓமம், வெப்பாலையரிசி, சிறுதேக்கு, முருங்கைவிதை, காவிக்கல், வசம்பு, கருவாப்பட்டை, பத்ம காஷ்டம், விலாமிச்சவேர், சந்தனம், அதிவிடயம், குருந்தொட்டி, ஓரிலை, மூவிலை, வாய்விளங்கம், தகரம், கொடிவேலி, தேவதாரு, செவ்வியம், பேப்புடல் இலை, ஜீவகம், ரிஷபகம், கிராம்பு, மூங்கி லுப்பு, வெண்தாமரைக்கிழங்கு, காகோலி, பச்சிலை, ஜாதிபத்திரி, தாளிசபத்திரி, வகைக்குத்தோலா ஒன்று, நிலவேம்பு தோலா $26\frac{1}{2}$ ஆக இவைகளை இடித்துப் பொடிசெய்து அரைத்தோலாபொடியை சாப்பிட திரிதோஷங்கள், சகல ஜ்வரங்கள், தாதுஜ்வரங்கள், விஷ மஜ்வரங்கள், ஜீர்ணஜ்வரம், ஏகாஹிகஜ்வரம், மயக்கம், சோம்பல், கிருகிருப்பு, தாகம், சுவாஸம், காஸம், பாண்டு, ஹிருதயரோகங்கள், காமாலை, பிடரிவலி, முதுகுவலி, இடுப்புவலி, முழங்கால்வலி, பார்சுவ

சூலம், ஆகிய இவை போம். குளிர்ந்த ஜலத்தில் சாப்பிட சகல ஜ்வரங்களும் போம். லவங்காதி சூர்ணம்—கிராம்பு, ஜாதிக்காய், திப்பிலி, வகைக்குத்தோலா ஒன்று, மிளகு தோலா இரண்டு, சுக்கு தோலா 16, ஜீனி தோலா 21, இவைகளுள் ஜீனி நீங்கலாக மற்ற வைகளை இடித்துப் பொடிசெய்து ஜீனியையும் கலந்து அதில் அரைத்தோலா பொடியை தகுந்த அனுபானத்தில் சாப்பிட காஸம், ஜ்வரம், அரோசகம், பிரமேஹம், குன்மம், சுவாஸம், அக்னிமந்தம் கிரஹணி, ஆகிய இவை நீங்கும். சார்ங்கதரத்தில் கூறப்பட்டுள்ள லவங்காதி சூர்ணம்—கிராம்பு, பச்சைக்கர்பூரம், ஏலம், கருவாப்பட்டை, சிறுநாகப்பூ, ஜாதிக்காய், விலாமிச்சவேர், சுக்கு, கருஞ்ஜீரகம், திப்பிலி, அகில், மூங்கிலுப்பு, சடாமாஞ்சி, கருநெய்தல் கிழங்கு, சந்தனம், தகரம், வெட்டிவேர், வால்மிளகு ஆகியஇவைகளை வகைக்கு ஒரு தோலா எடுத்துப்பொடிசெய்து அதில் சர்க்கரை தோலா ஒன்பது சேர்த்து அரைதோலா முதல் ஒரு தோலாவரை தகுந்த அனுபானத்தில் கொள்ள அக்னி தீபனம் செய்யும். அரோசகத்தை விலக்கும். திருப்தியை யுண்டுபண்ணும், தாதுபுஷ்டி செய்யும். திரிதோஷஹரம், பலம்கொடுக்கும், ஹிருதயரோகம், தொண்டை நோய், காஸம், விக்கல், பீனசம், க்ஷயம், தமகம், அதிசாரம், உரக்ஷதம், பிரமேஹம், அரோசகம், குன்மம், கிரஹணீ, முதலியன சமிக்கும். குரண்டகாதி லேஹியம்—மருதோன்றி சமூலம் இடித்து 64 தோலா பொடியில் சின்னப்படி 16 படி ஜலம்விட்டு இரண்டு படியாக வற்றவைத்துக் கஷாயம்செய்து வடிகட்டி அதை அடுப்பேற்றி மூன்றில் ஒன்றாக வற்றவைத்து அதில் ஏலம், கிராம்பு, திரிபலை, செவ்வியம், பச்சிலை, சிறுநாகப்பூ, தேசாவாரம, பாடக்கிழங்கு, திப்பிலி, கொடுவேலி, கோஷ்டம், இலந்தை விதை, ரஸாஞ்சனம், ஓமம், சிரண்டை, வாய்விளங்கம், ஜீரகம், கருஞ்ஜீரகம், வெப்பாலையரிசி, கோரைக்கிழங்கு, காட்டு ஓமம், இந்துப்பு, கடுகுரோகிணி அதிவிடயம், மருள், புன்னை, பெருவாகை, வசம்பு, சிறுதேக்கு, இவைகளை இடித்துப் பொடிசெய்து போட்டு லேஹிய பதத்தில் எடுத்துக்கொண்டு ஒரு தோலா யெடைவீதம் சுடுநீர் அனுபானத்தில் 21 நாள் சாப்பிட நூதனஜீர்ணஜ்வரங்கள், பழயகாய்ச்சல், அக்னிமந்தம், அரோசகம், அஸ்திகாங்கை, ரக்தமாம்ஸங்களை யொட்டிய

காய்ச்சல்கள், ஸந்திஜ்வரம், ராத்திரிஜ்வரம், திரிதோஷஜ்வரங்கள், சுவாஸம், காஸம், தொண்டைநோய், ஆகிய இவை போம். குறிப்பு—இந்த மருந்தில் பொடிகளுக்கு அளவு சொல்லப்படவில்லை, தேன், நெய், சர்க்கரை இவைகளும் சொல்லப்படவில்லை. ஜ்வரங்களில் உபயோகிக்கப்படும் லேகியங்களுக்கு அனேகமாக நெய் சேர்ப்பது வழக்கமில்லை. தேன் சேர்ப்பதுண்டு. வடதேசங்களில் இம்மருந்து கையாளப்படுகிறது. நாமும் இதைச்செய்து உபயோகித்து வருகிறோம். சிறுதேக்கு நீங்கலாக மற்ற சரக்குகள் வகைக்குத் தோலா அரை, சிறுதேக்கு தோலா ஒன்று, இவைகளைப் பொடிசெய்து ஷடி கஷாயத்தில் சேர்த்து அடுப்பேற்றிக்கிளரி கிளரும்போது மருந்து முழுவதும் கரண்டியுடன் மொத்தையாகச் சுருண்டுவரும் சமயத்தில் கீழே இறக்கி ஆறின பிறகு மூன்று அவுன்சு தேன் சேர்த்துக் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும். இனி கிருதங்கள் சொல்லப்படுகின்றன. கஷாயம், வமனம், லகுபோஜனம், இவைகளால் ஜ்வரம் விலகாவிட்டால் ரூக்ஷனை நோயாளிக்கு கிருதம் உபயோகிக்க வேண்டும். கபம் தணிந்து வாதபித்தங்கள் மேலிட்டு இருக்கும் ஜ்வரங்களில் திரிதோஷங்கள் பக்குவநிலையை யடைந்த பிறகு கிருதங்கள் அமிருதம் போன்று குணம் செய்யும். இல்லாவிடில் அது விஷகுணத்தைக் கொடுக்கும். பஞ்சதிக்த கிருதம்—ஆடாதோடை, வேப்பம்பட்டை, சீந்தில்கொடி, கண்டங்கத்திரி, பேப்புடல், இவைகளின் கஷாயத்தில் இவைகளையே கல்கமாகச் சேர்த்து நெய்வடித்து தினம் காலையில் ஒரு அவுன்சு வீதம் சாப்பிட்டுவர விஷமஜ்வரங்கள், பாண்டு, குஷ்டம், அக்கி, கிருமிகள், மூலநோய் ஆகிய இவை தீரும். குறிப்பு—இந்த கிருதத்தின் செய்முறை—சின்னப்படி ஒரு படி பசு நெய்யில் ஆடாதோடை முதலிய ஐந்து சரக்குகளின் கஷாயம் தனித்தனி ஒரு படி விட வேண்டும். அதாவது ஆடாதோடை முதலிய ஐந்து திரவியங்களையும் வகைக்கு 32 தோலா எடுத்து இடித்து ஓர் பானையில் போட்டு சின்னப்படி 20 சுத்த ஜலம் விட்டு ஐந்துபடியாக வற்றவைத்துக் கஷாயம் செய்து வடிகட்டி ஷடி நெய்யில் விடவேண்டும். ஆடாதோடை முதலிய ஐந்து திரவியங்களையும் உலர்த்தி வகைக்கு 3½ தோலா எடுத்து இடித்துப் பொடிசெய்து தண்ணீரில் கலக்கி

டி நெய்யில்விட்டு நெய் பதத்தில் வடித்துக்கொள்ளவும். அமிருதாதி கிருதம்—சீந்தில், திரிபலை, பேப்புடல், சிறுகாஞ்சொரி, வகைக்குத் தோலா நான்கு எடுத்து இடித்துப் பொடிசெய்து ஒரு படி நெய்யில் கலக்கி அதில் ஒரு படி பசுவின் பாலும் நான்குபடி சுத்த ஜலமும் சேர்த்து முன்போல பதமாகக் காய்ச்சி முன் அளவு சாப்பிட விஷமஜ்வரங்கள், க்ஷயம், குன்மம், காமாலை, ஆகிய இவை நீக்கும். ஷட்பலகிருதம்—திப்பிலி தேசாவரம், செவ்வியம், கொடுவேலி, சுக்கு, இந்துப்பு, ஆகிய இவை வகைக்குத் தோலாநான்கு இடித்துப் பொடிசெய்து அதில் பசுநெய் ஒருபடி, பசும்பால் நான்கு சேர்த்துப் பதமாகக் காய்ச்சி முன்போல சாப்பிட பிலீஹா, விஷமஜ்வரம், அக்னிமந்தம் போம், ருசியைக்கொடுக்கும். மஹா ஷட்பலம்—புங்கை, கொடுவேலி, திப்பிலி, தேசாவரம், செவ்வியம், கொடுவேலி, சுக்கு, சௌவர்சலவணம், ஜீரகம், கருஞ்ஜீரகம், பூநீர், யவக்ஷாரம், பிடாலவணம், பெருங்காயம், ஹபுஷா, இந்துப்பு, ஆகிய இவை வகைக்குத் தோலா ஒன்று இடித்துப் பொடிசெய்து சின்னப்படி ஒருபடி பசு நெய்யில் சேர்த்து அதில் காடி, இஞ்சிரஸம், வகைக்குச் சின்னப்படி இரண்டு சேர்த்துப் பதமாகக் காய்ச்சி முன்போல சாப்பிட அரோசகம், அக்னிமந்தம், பிலீஹா, ஜ்வரம், சுவாஸம், ஆகிய இவைபோம். இனி தைலங்கள் சொல்லப்படுகின்றன. அசுவகந்தாதி தைலம்—அமுக்கரா, குருந்தொட்டி, அரக்கு, வகைக்குத் தோலா 64, இவைகளை இடித்து அதில் ஜலம் சின்னப்படி 32 விட்டு எட்டு படியாக வற்றவைத்துக் கஷாயம் செய்து வடிகட்டி அதில் நல்லெண்ணை சின்னப்படி மூன்று, தயிர் நீர் 12 படி சேர்த்து அதில் அமுக்கரா, மஞ்சள், தேவகாரு, அரேணுகம், கோஷ்டம், கோரைக்கிழங்கு, சந்தனம், மஞ்சள், கடுரோகிணி, சதகுப்பை, அரக்கு, மருள், முள்ளங்கி, தேவகாரு, மஞ்சிஷ்டி, அதிமதுரம், விலாமிச்சவேர், நன்னாரி, வகைக்கு, தோலா $2\frac{5}{8}$ இடித்துப் பொடிசெய்து கலந்து தைல பதமாகக் காய்ச்சி அப்யங்கம் செய்ய சகல ஜ்வரங்களும் போம். க்ஷயம் விலகும். ஷட்தக்ர தைலம்—சௌவர்சலம், சுக்கு, கோஷ்டம், மருள் கொம்பரக்கு, மஞ்சள், மஞ்சிஷ்டி, வகைக்குத் தோலா $2\frac{1}{4}$ இடித்துப் பொடிசெய்து நல்லெண்ணை சின்னப்படி ஒன்று, மோர் சின்னப்படி

ஆறு, சேர்த்துத் தைலபதமாகக் காய்ச்சி அப்யங்கம் செய்துவர குளிரும் எரிச்சலும் போம். இங்கு மோர் என்பது தயிரை ஆடையுடன் தண்ணீர் விடாமல் சிலுப்பி எடுத்துக்கொள்ள வேண்டும். லதுலாக்ஷாதி—கொம்பரக்கு, மஞ்சள், மஞ்சிஷ்டி, வகைக்குத் தோலா $5\frac{1}{3}$ இடித்துப்பொடிசெய்து நல்லெண்ணை சின்னப்படி ஒன்று, கஞ்சி சின்னப்படி ஆறு, சேர்த்துத் தைலமாகக்காய்ச்சி வடித்து அப்யங்கம் செய்துவர முன்குணமுண்டாம். மஹாலாக்ஷாதி—எண்ணை, பசும்பால், வகைக்குச் சின்னப்படி ஒன்று, கொம்பரக்கு கஷாயம் சின்னப்படி நான்கு சேர்த்து அதில் லோத்திப்பட்டை, கட்பலம், மஞ்சிஷ்டி, கோரைக்கிழங்கு, சிறுநாகப்பூ, பத்மகாஷ்டம், சந்தனம், நெய்தல்கிழங்கு, அதிமதுரம், வகைக்குத்தோலா நான்கு இடித்துப் பொடிசெய்து போட்டு பதமாகக்காய்ச்சி அப்யங்கம் செய்ய சகல ஜ்வரங்களும் போம். பலம், புஷ்டி, இவைகளைக்கொடுக்கும். ஷட்சரண தைலம்—கொம்பரக்கு, அதிமதுரம், மஞ்சிஷ்டி, மருள், சந்தனம், நன்னாரி, வகைக்குத்தோலா $2\frac{5}{8}$ இடித்துப்பொடிசெய்து அதில் நல்லெண்ணை சின்னப்படி ஒன்று, ஜலம் சின்னப்படி நான்கு சேர்த்துப் பதமாகக்காய்ச்சி அப்யங்கம் செய்ய முன்குணமுண்டாம். அங்காரக தைலம்—கொம்பரக்கு, மருள், மஞ்சள், மரமஞ்சள், மஞ்சிஷ்டி, பேய்க்கொம்மட்டிவேர், கண்டங்கத்திரி, இந்துப்பு, கோஷ்டம், அரத்தை, சடாமாஞ்சி, தண்ணீர்விட்டான், வகைக்கு $1\frac{1}{3}$ தோலா எடுத்து இடித்துப்பொடி செய்து அதில் நல்லெண்ணை சின்னப்படி ஒன்று, வடிகஞ்சி சின்னப்படி நான்கு சேர்த்துப் பதமாகக்காய்ச்சி அப்யங்கம் செய்ய முன்குணமுண்டாம். மத்யலாக்ஷாதி—நல்லெண்ணை சின்னப்படி ஒன்று கொம்பரக்கு கஷாயம் சின்னப்படி நான்கு (அதாவது கொம்பரக்கு தோலா 128 எடுத்து இடித்து அதில் சின்னப்படி 16 ஜலம்விட்டு நான்குபடியாக வற்றவைத்துக்கொள்ளவும்) தயிர் நீர் சின்னப்படி நான்கு சேர்த்து அதில் கோஷ்டம், அதிமதுரம், தேவதாரு, மஞ்சள், கோரைக்கிழங்கு, மருள், கடுகுரோகிணி, சதகுப்பை, அரேணுகம், பச்சைக்கர்ப்பூரம், அரத்தை, வகைக்குத்தோலா ஒன்று இடித்துப்பொடிசெய்து போட்டுப் பதமாகக்காய்ச்சி அப்யங்கம் செய்ய ஜீர்ணஜ்வரம், விஷமஜ்வரம், க்ஷயம், இவைகளில் நன்மை

210249

செய்யும். குழந்தைகள், கர்ப்பிணிகள், விருத்தர்கள், இவர்களுக்கு ஏற்றது. சந்தனபலாலாக்ஷா தைலம்—சந்தனம், குருந்தொட்டி, கொம்பரக்கு, விலாமிச்சம்வேர், வகைக்குத் தோலா 64 இடித்து சின்னப்படி 32 ஜலம் விட்டுக்கஷாயம் செய்து எட்டுபடியாக வற்ற வைத்து வடிகட்டி அதில் நல்லெண்ணெ சின்னப்படி நான்கு, பசும்பால் சின்னப்படி எட்டு, சேர்த்து அதில் சந்தனம், விலாமிச்சவேர், அதிமதுரம், சதகுப்பை, கடுகுரோகிணி, தேவதாரு, மஞ்சள், கோஷ்டம், மஞ்சிஷ்டி, அகரு, வெட்டிவேர், அமுக்கரா, குருந்தொட்டி, மரமஞ்சள், மருள், கோரைக்கிழங்கு, முள்ளங்கி, ஏலம், கருவாப்பட்டை, சிறுநாகப்பூ, அரத்தை, கொம்பரக்கு, ஸர்ப்பகந்தா சம்பகமொட்டு, வேங்கை, நன்னாரி, சிவதை, கருஞ்சிவதை, வகைக் $2\frac{1}{4}$ தோலா இடித்துப்பொடிசெய்து போட்டு பசும்பால் சின்னப்படி எட்டு சேர்த்து தைலபதமாக வடித்து அப்யங்கம் செய்ய ஏழு தாதுக்களும் விருத்தியடையும். காஸம், சுவாஸம், க்ஷயம், வாந்தி. பெரும்பாடு, ரக்தபித்தம், பித்தகபநோய்கள், ஆகிய இவை போம், நிறம் உண்டாகும், எரிச்சல், தினவு, சொறி, நீங்கும். சிரோரோகங்கள், கண் எரிச்சல், வாதநோய்கள், சோபம், பாண்டு, விசேஷித்த ஜ்வரங்கள், ஆகிய இவை போம். பாலர்முதல் அனைவருக்கும் நன்மைசெய்யும். இனி பாகங்கள் சொல்லப்படுகின்றன.

ஸேவந்திபாகம்—சாதாரணமாக பெண்கள் தலைக்குவைத்துக்கொள்ளும் "ஜவந்திப்பூ" என்றவஸ்துக்கு வடமொழியில் "ஸேவந்தி" எனப்பெயர். அதில் இருவகையுண்டு. மஞ்சள் புஷ்பம் ஓர் வகை வெளுப்பு புஷ்பம் மற்றோர் வகை. இங்கு வெள்ளைப்புஷ்பத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். ஆயிரம் புஷ்பங்களை எடுத்து பசுநெய் சின்னப்படி இரண்டில் போட்டு அடுப்பேற்றி இலேசாகவதக்க வேண்டும். பிறகு சர்க்கரை தோலா 16, கருவாப்பட்டை, ஏலம், பச்சிலை, சிறுநாகப்பூ, வகைக்கு, தோலா நான்கு, திராக்ஷை தோலா 24, தாராஸத்வம் தோலா இரண்டு, இவைகளில் திராக்ஷை நீங்கலாக மற்றவைகளைப் பொடிசெய்து திராக்ஷையையும் அரைத்துச் சேர்த்துக்கிளரி பிறகு தேன்தோலா 32 சேர்த்துக்கலந்து, அரைத் தோலா சாப்பிட பழங்காய்ச்சல், க்ஷயம், காஸம், அக்னிமந்தம், பிரமேஹம், பெரும்பாடு, ரத்தத்தைப்பற்றிய நோய்கள், குஷ்டம்,

மூலம், கண்ணோய்கள், முகநோய்கள், ஆகிய இவை போம். குறிப்பு—ஆயிரம் புஷ்பங்களை காம்பு நீக்கி நன்றாக ஜலம் விடாமல் அரைத்துப்பிறகு நெய்யில் வதக்கிப்பிறகு பொடிகளைத்தூவி கிண்டவேண்டும். இங்கு சொல்லப்பட்ட "தாரஸத்வம்" என்பது மண் உண்ணி பூச்சியின் சத்துவம் இதன் விவரத்தை யோகரத்னாகரம் முதல் பாகம் 179-வது பக்கத்தைப்பார்க்கவும். பிப்பலீபாகம்—திப்பிலி 64 தோலா எடுத்துப்பாலில் அரைத்துப் பிறகு சர்க்கரை 256 தோலாவைப் பாகுசெய்து அதில் ஷை திப்பிலியைப்போட்டு நெய் சின்னப்படி இரண்டு சேர்த்துப் பதமாகக்கிளறி ஆறின பிறகு கருவாப்பட்டை, ஏலம், பச்சிலை, சிறுநாகப்பூ, ஆகிய இவை வகைக்கு தோலா மூன்று பொடிசெய்து போட்டு நன்றாகக்கலந்து அரைத்தோலா முதல் ஒரு தோலாவரை உட்கொள்ள பலவிருத்தி, தாது புஷ்டி, ஹிருதயபலம், தேஜோவிருத்தி, இவைகளைச் செய்யும். பழங்காய்ச்சல், இளைப்பு, வாந்தி, தாகம். அரோசகம், சுவாஸம், விக்கல், காமாலை, ஹிருதயரோகம், பாண்டு, தொண்டை நோய், வாதரக்தம், பீனசம், ஆமவாதம், ஆகிய இவை போம். ஒரு வருஷம் விடாமல் உபயோகிக்க கல்பகுணத்தைக் கொடுக்கும். இனி ரஸமருந்துகள் சொல்லப்படுகின்றன. ரஸராஜலக்ஷ்மீ என்ற நூலில் கூறப்பட்ட நவஜ்வரேபாங்குசம்—கந்தகம், வெங்காரம், ரஸம், மிளகு, இவைகளைக் கல்வத்திலிட்டு ஒன்றாக அரைத்து மீன்களின் பித்தத்தால் மூன்றுநாள் பாவனைசெய்து உலர்த்தி நான்கு குன்றியிடை கொடுக்கவும். கத்திரிப்பிஞ்சு, மோர் அன்னம் இவை பத்தியம், இந்த மருந்தை உட்கொண்டவுடன் மிகுந்த வியர்வை பிறந்து காய்ச்சல் தணியும். குறிப்பு—ரஸகந்தங்களைச் சுத்திசெய்து கல்வத்திலிட்டு அரைத்து ரஸம்மடியும் படிசெய்துகொள்ளவும். வெங்காரத்தைத் தணலில் பொரித்து எடுத்துக்கொள்ளவும். நாராயணஜ்வராங்குசம்—வெள்ளைப்பாஷாணம், வத்ஸநாபி (நமது கடைகளில் கிடைக்கும் கருநாபியை எடுத்துக்கொள்ளவும்) ரஸம், கந்தகம், தாளகம், திரிகடு, சோகிபஸ்மம், கஞ்சாவிதை, ஊமத்தை விதை (கரு ஊமத்தை விதை நல்லது) வெங்காரம் (பொரித்தது) இவைகளைச் சமயெடை எடுத்து இஞ்சி ரஸத்தால் மூன்றுநாள் அரைத்து அரைக்குன்றியிடை மாத்திரைகளாக உருட்டிக் காய

வைத்து ஒருமாத்திரை உள்ளுக்குத் தகுந்த அனுபானத்துடன் சாப்பிட குளிர்சுவரம் (அதாவது மலேரியா) சன்னி, காலரா, மற்ற முறைக்காய்ச்சல்கள், இவைகளில் மிகுந்த நன்மைசெய்யும். மருந்தை உட்கொண்ட பிறகு போர்வையால் நோயாளியை மூடினால் வியர்வை உண்டாகும். குறிப்பு—இந்த மருந்தை எல்லா காய்ச்சல்களிலும் நாம் உபயோகிப்பது வழக்கம். வடதேசங்களிலும் முக்கியமாக உபயோகப்படுகின்றது. யோகரத்நாகரம் முதல் பாகத்தில் விவரித்தபடி இந்தத்திரவியங்களைச் சுத்திசெய்து கொள்ள வேண்டும். நமது வாடிக்கையில் ரஸம், தாளகம், வெள்ளைப்பாஷாணம், இந்த மூன்று வஸ்துக்களையும் பஸ்மம் செய்து உபயோகித்து வருகிறோம். மலேரியாவில் மிகுந்த நன்மை கொடுக்கின்றது. வெள்ளைப்பாஷாணம் மலேரியாவுக்கு உயர்ந்த மருந்து வத்ஸநாபி பொதுவாக எல்லாக்காய்ச்சல்களுக்கும் நல்லது. ஆங்கில வைத்யர்களும் காய்ச்சலைக்கண்டிக்கும் மருந்துகளில் வத்ஸநாபியை விட உயர்ந்த வஸ்து கிடையாதென்று கூறியுள்ளார்கள். இந்த இரண்டும் சேருவதால் இம்மருந்து எல்லா காய்ச்சல்களிலும் நன்மையளிக்கின்றது. ஊமத்தை விதையும் காய்ச்சலுக்கு நல்லது. அமிருதாரிஷ்டம்போன்ற அனுபானங்களுடன் கொடுக்கலாம். வென்னீர் அனுபானத்திலும் கொடுக்கலாம் பஞ்சாமிருத ரஸம்—தங்கம், வெள்ளி, தாமிரம், கருவங்கம், அயம், முறையே 1, 2, 3, 4, 5, தோலா எடுத்து அரைத்து முதலைபின்பித்தத்தால் ஒருநாள்பாவனை செய்து உலர்த்தி நான்கு குன்றியிடை மருந்தை சர்க்கரை அல்லது இஞ்சி ரஸம் அனுபானத்துடன் கொடுக்க சகல ஜ்வரங்களும் போம். முன் சொன்ன ஐந்து திரவியங்களையும் பஸ்மம்செய்து அளவுப்படி எடுத்துக்கொள்ளவும். ஜீர்ணஜ்வராங்குசம்—ரஸம், அப்பிரகம், கருவங்கம், தாமிரம், காந்தம், வைக்ராந்தம், இவைகளின் பஸ்மம், சுத்திசெய்த லிங்கம், பொரித்த வெங்காரம், சுத்திசெய்த கந்தகம், வத்ஸநாபி, கோஷ்டம், ஆக இவைகளைச் சமஎடை எடுத்து அரைத்து திரிகடு, திரிபலை, கோரைக்கிழங்கு, கரிப்பான், நொச்சி, இவைகளின் கஷாயம் அல்லது ரஸத்தால் மூன்றுநாள் பாவனை செய்து உலர்த்தி உளுந்தளவு தகுந்த அனுபானத்துடன் உட்கொள்ள பழங்காய்ச்சல், க்ஷயம், காஸம், அக்னிமந்தம், பாண்டு,

ஹலீமகம், குன்மம், மகோதரம், மூகவாதம், கிரஹணீ, மூலம், அரோசகம், இவைகளைப் போக்கும். காந்தி, பளபளப்பு, வீர்யம், பலம், புஷ்டி, இவைகளை விருத்திசெய்யும். முக்தாபஞ்சாமிருதரஸம்—முத்து, பவழம், வெள்வங்கம், சங்கு, முத்துச்சிப்பி, இவைகளின் பஸ்மத்தை முறையே எட்டு, நான்கு, இரண்டு, ஒன்று ஒன்று, தோலா வீதம் எடுத்து கரும்புச்சார், பசும்பால், முதக்கன் கிழங்கு ரஸம் அல்லது கஷாயம், குமரிச்சார், தண்ணீர்விட்டான் ரஸம், துளசிச்சார், சிறுபுள்ளடிச்சார், இவைகளால் எட்டு மணி அரைத்து பில்லைதட்டிக்காயவைத்து அகலில் வைத்து அகல்மூடி சந்துவாய்க்குச் சீலைமண்செய்து காயவைத்து ஐந்துகாட்டு எருவில் புடமிடவும். மறுபடியும் எடுதது முன்போல அரைத்து முன்போல புடமிடவும். இவ்விதம் மொத்தம் ஐந்து புடமிடவும். நான்கு குன்றிஎடையுடன் கொஞ்சம் கடுக்காய்ப்பொடிசேர்த்து ஓர் பாத்திரத்தில் வைத்து அதில் பசும்பாலைக்கலந்து நுரையுடன் அப்படியே சாப்பிட சகலஜ்வரங்களும் போம். வேறு தகுந்த அநுபானங்களிலும் சாப்பிடலாம். திரிபுவனகீர்த்தி ரஸம்—லிங்கம், வத்ஸநாபி, திரிகடு, வெங்காரம், தேசாவரம், இவைகளைச் சமஎடை அரைத்து துளசிச்சார், இஞ்சிச்சார், ஊமத்தைச்சார், இவைகளால் மூன்று பாவனை செய்யவும். பிறகு குன்றி எடையாக உருட்டிக் காயவைத்து ஓர் மாத்திரையை இஞ்சி ரஸம் அநுபானத்துடன் சாப்பிட சகலஜ்வரங்களும் சன்னிகளும் போம். குறிப்பு—இம்மருந்தும் நாம் வழக்கத்தில் உபயோகிப்பதுண்டு. மஹாஜ்வராங்குசம்—ரஸம், வத்ஸநாபி, கந்தகம், வகைக்குத்தோலா ஒன்று ஊமத்தைவிதை தோலா மூன்று, திரிகடு வகைக்குத் தோலா நான்கு, இவைகளைப் பொடிசெய்து "ஹேமக்ஷீரீ" என்ற மூலிகையின் ரஸத்தால் நான்கு பாவனைசெய்து காயவைத்து இரண்டு குன்றிஎடை மருந்தை எலுமிச்சம்பழ ரஸம் அல்லது இஞ்சிரஸ அநுபானத்துடன் உட்கொள்ள ஒன்றுவது முறை, இரண்டாம் முறை, மூன்றும் முறைக்காய்ச்சல், நான்காம் முறைக்காய்ச்சல், விஷமஜ்வரங்கள் முதலியவை நான்குமணி நேரத்தில் தணியும். குறிப்பு—இந்த மருந்து வழக்கத்திலுள்ளதே. இங்கு சொல்லப்பட்ட "ஸ்வர்ணக்ஷீரீ" என்ற மூலிகையைப்பற்றி விவரணம் வேண்

310249



டுவது அவசியம். "ஸ்வர்ணக்ஷீரீ ஹிமாவதீ" என்று நிகண்டுவில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வஸ்து ஹிமாலயத்தில் உண்டாவதால் "ஹிமாவதீ" எனப்பெயரிடப்பட்டது. சக்ரதத்தம் கு
சிகித்ஸா சிவதாஸஸேன வியாக்யானத்தில்" காஞ்சனக்ஷீர்யா
வாத் கங்குஷ்டம் ஆஹு" என்று காணப்படுகிறது. அதா
"ஸ்வர்ணக்ஷீரீ என்பது கிடைக்காத வஸ்துவானதால் அதற்கு ப
லாக கங்குஷ்டம் என்ற திரவியத்தை எடுத்துக்கொள்ள வே
மென்பது பொருள். இனி கங்குஷ்டம் என்ற வஸ்துவை ஆ
சித்தால் "ஹிமவத்பாத சிகரே கங்குஷ்ட முபஜாயதே" என்ற
ரத் நஸமுச்சயதகில் வசனம் காணப்படுகிறது. கங்குஷ்டமெ
சரக்கும் ஹிமயமலையின் சாரலில் உக்பத்தி ஆவதாக இவ்வச
கூறுகிறது. ஆகவே கங்குஷ்டமென்பதும் ஸ்வர்ணக்ஷீரீ என்
ஒரே பொருள் என்றும் அது ஹிமயமலையில் உண்டாவதாக
நூல்களால் அறிகிறோம். மேலும் அப்பொழுது பிறந்த யானை
குட்டியின் முதல் மலமும் கங்குஷ்டமென்ற பெயருள்ளதாக "
யோ ஜாதஸ்ய தந்தின:" என்ற வாக்பட வசனத்தால் தெரிகி
ஸ்வர்ணக்ஷீரீ என்பது பேதிச்சரக்கு. அது கிடைக்காதகா
அதன் ஸ்தானத்தில் யானைக்குட்டியின் முதல் மலம் உபயோகிக்க
வேண்டுமென்பது சிவதாஸஸேனனின் அபிப்பிராயம். இச்செடி மல
வடதேசங்களில் கடைகளில் கிடைக்கின்றது. மலையாளத்திலு
ஏராளமாகக் கிடைக்கின்றது. மலையாளத்தில் இதற்குப்பெயர் கண்
வெண்ணை என்கின்றனர். சிலர் நமது நாட்டில் ஸ்வர்ணக்ஷீரீ" எ
பதை குருக்குச்செடி என்கின்றனர். அதாவது பிரம்மதண்டு
செடியின் ஓர் பேதம். அதில் பால் மஞ்சளாக வருகிறது. கா
களில் கடுகுபோன்ற வித்துக்கள் இருக்கின்றன. செடியின் பா
எடுத்து கண்வலிக்குக் கண்களில் போடுவது நாட்டுவழக்கம்.
தச்செடியின் ரசத்தை பேதிக்கும் கொடுக்கின்றனர், ஆக
இதற்கு விரேசன சக்தியும் காணுகின்றோம். இந்தச்செடியை
சிலர் இம்மருந்தில் உபயோகிக்கின்றனர். யானைமலத்தைக் கஷா
யிட்டு பாவனைசெய்வதுதான் நமது வாடிக்கை. சிதாங்குசம்-
பயில்துத்தம், வெங்காரம், ரஸம், கர்பூரம், வத்ஸநாபி, கந்தக
தாளகம், இவைகளைச் சமஎடை எடுத்துக் கல்வத்திலிட்டு நீளப்